ஓர் அரசு நிறுவனம் அதைப் போல அடிக்கடி விலையை அதிகரிக்க இயலாது. ஆகவே, இந்த குறைபாடுகள் எல்லாம் உலக வங்கியின் உதவித் தொகை கிடைத்து அதன்மூலம் அந்த மிகப் பெரிய திட்டமொன்று நடைமுறைக்கு வருகின்றபோது களையப் பட்டு தமிழகத்தில் உற்பத்தியாகிற பட்டு நூல்களை நல்ல விலைக்கு கொள்முதல் செய்ய அரசு முயற்சி செய்யும்.

அந்தியூர் தொகுதியில் சத்துணவு மையங்கள்.

108-- (*வினா எண். 941)-- **திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அந்தியூர் தொகுதியில் உள்ள பர்கூர் மலையில் உள்ள குட்டையூர், தொள்ளி, கேளக அணை, கொங்காடை பெஜிலி பாளையம் ஆகிய ஊர்களில் சத்துணவு மையங்கள் அமைக்கப் படுமா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இநதப் பகுதியிலே ஆதி வாசிகள், ஆதி திராவிடர்கள் அதிகமாக வாழ்கிற கர்நாடக மாநில எல்லைப் பகுதியாக உள்ளதால், இங்கேயுள்ள ஒரு சிறார்கூட சத்துணவு பெறவில்லை, ஆரம்பக் கல்வி பெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, உடனடியாக இந்தப் பகுதிகளுக்கு அதிகாரிகளை அனுப்பிவைத்து உடனடியாகப் பள்ளிகளை, சத்துணவு மையங்களை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பர்கூர் மலையிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்கு பள்ளிக்கூட வசதியும் சத்துணவு வசதியும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அநதப்பகுதி என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற காரணத்தாலே இந்த வசதிகள் மட்டு மல்ல, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல சாலை வசதிகள், குடிக்க குடிநீர் வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அடிப்படை வசதி களும் இல்லை என்பதை அறிவேன். இதுகுறித்து ஆதி திராவிடர்

நலத்துறை அமைச்சர் அவர்களுடன் பேசி, கூடியவிரைவில் அந்தப் பகுதிக்கு அமைச்சரவர்களை அழைத்துக் கொண்டு வந்து, பல ஆண்டுக்காலமாக புறக்கணிக்கப்பட்டுள்ள அந்த மக்களின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த அரசு நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திருச்சியில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள்.

109—(*வினா எண். 488).- திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பார் ?

(அ) திருச்சியில் குடிசைவாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொன்னாலும் எதிர் காலத்திலாவது இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்வதோடு, வேறு திட்டத்தின் மூலம் திருச்சி யிலே வாழும் குடிசை வாழ் மக்களுக்குத் தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியைப் பொறுத்த அளவில் உலகவங்கித் திட்டத்தின் உதவியுடன் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் இன்றைய தினம் நடைமுறையில் உள்ளது. திருச்சி நகரில் 10,000 குடிசை மக்களுக்கு ரூ. 454 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் 1988-89 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் முடிக்கின்ற அளவுக்கு திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,